நாள்- 07.02.2023

Case No. HMOP.82/2019

PW.1 -ஆசைத்தம்பி –எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை

நான் இந்த வழக்கின் மனுதாரரர் என்றால் சரிதான். எனக்கு ஆங்கிலத்தில் எழுதப்படிக்க தெரியுமா என்றால் எனக்கு ஓரளவு தெரியும். நான் PUC படித்துள்ளேன். நான் என்ன வேலை செய்து வருகிறேன் என்றால் நெல் அரிசி வியாபாரம் மற்றும் ரியல் எஸ்டேட் தொழிலும் செய்து வருகிறேன். ரியல் எஸ்டேட் வியாபாரம் தொழில் செய்து வருவதாக சொல்கிறேன் அதற்கு பெயர் எதுவும் உள்ளதா என்றால் இல்லை. ரியல் எஸ்டேட் தொழில் மற்றும் நெல் அரிசி வியாபாரம் எங்கு செய்கிறேன் என்றால் ஆற்காட்டில் செய்கிறேன். நான் திருமணம் ஆகும்போதும் நான் மேற்படி வியாபாரம் மற்றும் ரியல் எஸ்டேட் தொழில் செய்து வந்தேனா என்றால் செய்துவந்தேன். மேற்படி தொழில் செய்வதற்கு நான் வேலை ஆட்களை வைத்துள்ளேனா என்றால் கூலி ஆட்களை வைத்துள்ளேன், அவர்கள் வேலை செய்ததும் கூலி கொடுத்துவிடுவேன். வேலை இருந்தால் சுமார் 10 பேர்களை வைத்து வேலை செய்வேனா என்றால் செய்வேன். மேற்படி தொழில் மூலமாக எனக்கு மாதம் ரூபாய் 5 லட்சம் வருமா என்றால் இல்லை, மாதம் 50 ஆயிரம் முதல் 60 ஆயிரம் வரை வரும் , பின்னிட்டு சாட்சி மாதம் சுமார் ரூபாய் 50 ஆயிரம் வரும் என்று சாட்சியம் அளிக்கிறார். எனக்கு எந்த தேதியில் திருமணம் ஆனது என்று ஞாபகம் உள்ளதா என்றால் 2.2.1987 ல் திருமணம் ஆனது. திருமணம் எங்கு நடந்தது என்றால் பாண்டிச்சேரியில் உள்ள வீராம்பட்டினத்தில் நடந்தது. வீராம்பட்டினம் எனக்கு சொந்தஊரா அல்லது என் மனைவிக்கு சொந்த ஊரா என்றால் என் மனைவிக்கு சொந்த ஊராகும். நான் இந்த மனுவை திருமணம் முடிந்து சுமார் 35 ஆண்டுகள் கழித்து போட்டுள்ளேன் என்றால் சுமார் 32 ஆண்டுகள் கழித்து போட்டுள்ளேன். இந்த மனு தாக்கல் செய்யும்போது நான் இந்த மனுவோடு திருமண பத்திரிக்கை, திருமண புகைப்படம் மற்றும் திருமண சான்றிதழை சேர்த்து தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. இந்த மனு தாக்கல் செய்யும்போது வழக்கறிஞர் அறிவிப்பு , அஞ்சலக ஒப்புதல் அட்டை மற்றும் ஆதார் அட்டை மட்டும்தான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான், மேற்படி திருமண பத்திரிக்கை , திருமண சான்றிதழ்

,திருமண புகைப்படம் என் மனைவியிடம் தான் உள்ளது. நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பின் தேதி 24.12.2018 என்றால் சரிதான். 2018ம் வருட காலக்கட்டத்தில் என் மனைவி ஆற்காட்டில்தான் வசித்து வந்தார் என்றால் சரியல்ல. நான் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றும் மேற்படி வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பும்போது என் மனைவி ஆற்காட்டில் தான் வசித்து வந்தார் என்றால் சரியல்ல, பாண்டிச்சேரியில் தான் வசித்து வந்தார். ஆற்காட்டில்தான் இருந்து வந்தார், நான் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்காக ஒரு ஆவணம் தயார் செய்ய வேண்டும் என்பதால் என் மனைவி பாண்டிச்சேரியில் வசித்து வருவதாக ஒரு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு பத்தி 2ல் எதிர்மனுதாரர் என் சட்டப்பூர்வமான மனைவி என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான், பதிவு திருமணமும் செய்துள்ளேன். மேற்படி திருமணம் மூலமாக எனக்கு எவ்வளவு குழந்தைகள் பிறந்தன என்றால் 2 பெண் குழந்தைகள் பிறந்தன. அவர்கள் பெயர் என்ன என்றால் கலைச்செல்வி மற்றும் மோனிஷ்ஸ்நேகா ஆகும். முதல் மகள் கலைச்செல்விக்கு எவ்வளவு வயதாகிறது என்றால் சுமார் 34 வயதாகிறது, 2வது மகள் மோனிஷ்ஸ்நேகாவிற்கு எவ்வளவு வயதாகிறது என்றால் சுமார் 28 வயதாகிறது. மேற்படி இரண்டு மகள்களுக்கும் திருமணம் ஆகிவிட்டதா என்றால் திருமணம் ஆகிவிட்டது. மேற்படி இருமகள்களுக்கும் திருமணம் ஆகும் சமயத்திலும் நான் நெல் அரிசி வியாபாரம் மற்றும் ரியல் எஸ்டேட் தொழில்தான் செய்து வந்தேன் என்றால் அந்த தொழில்தான் செய்து வந்தேன், தற்போது நஷ்டமாகிவிட்டது என்று சாட்சி தானாக சாட்சியம் அளிக்கிறார். முதல் மகளுக்கு எவ்வளவு நகை போட்டேன் என்றால் 50 சவரன் நகை போட்டேன், இரண்டாவது மகளுக்கு எவ்வளவு நகை போட்டேன் என்றால் 50 சவரனுக்கு மேல் நகை போட்டேன். 50 சவரனுக்கு மேல் எவ்வளவு போட்டேன் என்றால் சுமார் 60 முதல் 65 சவரன் நகை இருக்கும். மேற்படி நகைகளை என்னுடைய சுயசம்பாத்தியத்தில் வாங்கினேனா என்றால் என்னுடைய சுயசம்பாத்தியத்திலும் வாங்கினேன், என்னுடைய மூதாதையர் நகையும் அதில் அடங்கும். நான் சொல்வது முழுவதும் பொய் என்றும் மேற்படி என் மகள்களுக்கு திருமணத்திற்காக கொடுக்கப்பட்ட

நகைகள் அனைத்தும் என் மாமனார் கொடுத்த நகைகள் என்றால் சரியல்ல. என்னுடைய இரண்டு மகள்களையும் அழைத்து விசாரித்தால் உண்மை தெரியவரும் என்றால் அழைத்து விசாரித்து தெரிந்துகொள்ளுங்கள். எனக்கும், என் மனைவிக்கும் திருமணம் ஆகும்போது எவ்வளவு நகைகள் போட்டார்கள் என்றால் எனக்கு தெரியாது, எனக்கு எந்த நகையும் போடவில்லை. என் மனைவிக்கு திருமணத்தின் போது அவரது பெற்றோர்கள் 50 சவரன் நகைகள் என்னிடம் சீதனமாக கொடுத்தார்கள் , நான் அதனை விற்பனை செய்து வியாபாரத்திற்காக எடுத்துக்கொண்டேன் என்றால் சரியல்ல. என் மாமனார் உயிரோடு இருந்த காலத்தில் எனக்கு ரூ.1 கோடியே 20 லட்சம் ரூபாய் வியாபாரத்திற்காக கொடுத்தார் என்றும் அதனையும் நான் எடுத்துக்கொண்டேன் என்றால் சரியல்ல. என் மாமனார் ஒரு சந்தர்ப்பத்தில் ஆற்காட்டில் எங்கள் வீட்டில் வைத்து என்னிடம் ரூ.40 லட்சம் கொடுத்தார், மற்றொரு சந்தர்ப்பத்தில் ரூ.30 லட்சம் கொடுத்தார் , மற்றொரு சந்தர்ப்பத்தில் ரூ.50 லட்சம் கொடுத்தார் என்றால் சரியல்ல, எனக்கு என் மாமனார் எந்த பணமும் கொடுக்கவில்லை. மேற்படி தொகைகள் மற்றும் நகைகளை என்னுடைய மச்சான் கோவிந்தன் முன்னிலையில் என் மாமனார் என்னிடம் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. மேற்படி என் மச்சான் கோவிந்தனை அழைத்து விசாரித்தால் உண்மை நிலவரம் தெரியவரும் என்றால் அழைத்து விசாரித்துக்கொள்ளுங்கள். திருமணத்தின்போது சீதனமாக கொடுத்த நகைகள் மற்றும் என் மாமனார் எனக்கு கொடுத்த ரூ.1 கோடியே 20 லட்சம் பணத்தை ஏமாற்றவேண்டும் என்றும் என் மனைவி வீட்டை விட்டு வெளியேற்ற இந்த பொய்யான வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. என் மனைவி என்னை கத்தியால் குத்த வந்ததாக மனுவில் சொல்லியுள்ளேன் அது சம்மந்தமாக நான் காவல்நிலையத்தில் என் மனைவி மீது புகார் எதுவும் கொடுத்துள்ளேனா என்றால் இல்லை. என் மனைவிக்கு எத்தனை வயது என்றால் சுமார் 57 வயது ஆகிறது. இந்த வயதில் என் மனைவிக்கு கள்ளத்தொடர்பு உள்ளதாக சொல்கிறேன் என்றால் இல்லை, அவருக்கு 35 வயதிருக்கும்போது கள்ளத்தொடர்பு இருந்ததாகத்தான் சொல்லியுள்ளேன். அந்த சமயத்தில் நான் எந்தவித புகாரும் மற்றும் உறவினர்களிடம் சமரச முயற்சி செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன். அது பற்றி நான் மனுவில்

சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. தற்போது நானும், என் மனைவியும் ஒரே வீட்டில்தான் உள்ளோம் என்றால் உள்ளோம், ஆனால் தனித்தனியாகத்தான் உள்ளோம். இந்த வழக்கிற்காக நான் கற்பனையான நிகழ்வுகளை சொல்கிறேன் என்றும் வழக்கில் சொல்லியுள்ள சங்கதிகள் அனைத்தும் பொய்யானவை என்றால் சரியல்ல. என் மனைவி என் சொத்தை அபகரிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் நான் இந்த வழக்கை பொய்யாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் என் மனுவில் விவாகரத்து கேட்க எந்தஒரு ஆய்வுகூறும் இல்லை என்றால் சரியல்ல. தீருமணமாகி 32 ஆண்டுகள் கழித்து இந்த வழக்கு விவாகரத்து கேட்டு தாக்கல் செய்த இந்த மனு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. எனவே பொய்யான காரணங்கள் கூறி இந்த மனுவை தாக்கல் செய்துள்ளதால் இந்த மனுவை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை– இல்லை.